முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சூரியபகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

28.01.2019, திங்கட்கிழமை

1. **தரும சக்கரம் தன்னுள் கொண்டு**
**தவசித்தியாக உலகை வென்றிட**
**தருமம் பெருக்கிடும் அரங்கராசா**
**தவசியே உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி கலை திங்கள்**
**தெரியவே முன்னான்கீா் திகதி சோம வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 14ம் நாள் 28.01.2019, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு பஞ்சபாண்டவர்களை தொடர்ந்து**
3. தொடர்ந்து நவகிரக நாயகர்களும்
தெரிவிப்போம் பலன்கள் தன்னை
**சுடர்மிகு சூரியபகவான் யானும்**
செப்பிடுவேன் உலகோர் நலம் பெற
4. நலம் தரும் ஞானபலம் தரும்
ஞானயுக படைப்பும் தருகின்ற
நலமிக்க அரங்கன் குடிலில்
நவகிரக நாயகர்கள் தானும்
5. தானும் சூட்சும வடிவில் அருளி
தருமவான்களை காக்கின்றோம்
ஞானதேசிகன் தன்னை அணுகி
ஞாயிறுதோறும் வணங்கும் மக்களுக்கு
6. மக்களுக்கு சூரியபகவான் என்
மகத்துவமுள ஆசி கிட்டும்
தேக்கமிலா கழனி மக்களும்
தேசிகன் ஆசி அருள் பெற
7. ஆசி பெற கழனி காக்கும்வல்ல
ஆதித்தன் யானும் பயிர் காப்பேன்
நேசமுடன் உலக உயிர் காப்பேன்
நீதிகுன்றா வரும் மக்களை
8. மக்களை பீடை சோடை அணுகா
மண்ணுலகில் காப்பேன் மீட்பேன்
தேக்கமிலா உலகப் பொருள்வளம்
தேசிகன் ஆசி பெற வளரும்
9. வளரும் ஞானிகள் வருகையால்
வையகமே ஞானயுக மாற்றமாக
மலரும் அதிமேலான நிலைக்கு
முருகப்பெருமான் அருளால் தேறும்

10. தேறவே ஞானமாக வந்த
திருவருளாக வந்த அரங்க ஞானி
அறம் வழி சேரும் மக்களே
அழியாமை பேரின்பம் அடைவர்

11. அடைவரே நல்ல சுற்றமும்
ஆதவன் போல் சக்திகள் கூடி
சோடைபோக வாழ்வு பெறுவர்
செப்பி வந்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–